இராயபுரம் பகுதியில் இரும்புத்தூளை ஏற்றுமதி செய்யும்போது ஏற்படும் தொல்லை குறித்தும், முகவை மாவட்டத்தில் நூலக ஊழியர்களுக்கு வேலை உத்தரவாதம் குறித்தும் தொண்டி காவல் நிலையத்தில் இரு பெண்கள் லாக்கப்பில் வைக்கப்பட்டிருப்பது குறித்தும்,

[திரு செ. சிவசாமி] [1978 ஏப்ரல் 7

மேலும் முகவை மாவட்டத்தில் நூலகத்தில் 270 பேர்களின் வேலை உத்தரவாதம் சம்பந்தமாக கவன ஈர்ப்பு பிரேரணை கொடுத்திருந்தேன். அதற்கு இன்றுவரை பதில் இல்லை.

அதைப்போல தொண்டி போலீஸ் ஸ்டேஷனில் இரண்டு பெண்கள் லாக்கப்பில் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று விதி 42-இன் கீழ் கொடுத்திருந்தேன். அதற்கும் பதில் இல்லை.

[முற்பகல் 10-20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து இந்தத் தரப்பிலே சொன்னதையெல்லாம் அரசு கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று நானும் சிபாரிசு செய்கிறேன், நல்லவைகளாக இருந்தால், நல்ல பிரச்னைகளாக இருந்தால்.

(ஓ) அவையில் எடுத்துக் கொள்ளப்படாத தீர்மானங்களுக்கான பதிலை உறுப்பினர்களுக்கு கிடைக்கும்படி செய்வது குறித்து.

*திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஏற்கனவே இங்கே தரப்பட்ட பல்வேறுவிதமான ஒத்தி வைப்பு தீர்மானங்களுக்கு உரிய நேரத்திலே பதில் சரியாக அரசுக்குக் கிடைக்காதிருப்பதன் காரணமாக என்று நான் கருதுகிறேன்—எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஆகவே, இன்றையதினமும் இங்கே ஒத்திவைப்பு தீர்மானங்கள் என்ற கருத்துக்கள் பேசப்பட்டனவே தவிர அந்தத் தீர்மானங்களுக்கு முறைப்படி பதில் கிடைக்கவில்லை. இன்று சட்டமன்றம் ஒத்திவைக்கப்படுமானால், அதற்குப் பதில்கள் அங்கத்தினர்களுக்கு தெரியாது. எனவே, கேள்விகள் போடப்படுமானால், அதற்குரிய பதில்கள் அச்சிட்டு தரப்படுகிற நிலைமை இருப்பதைப்போல், இந்த ஒத்தி வைப்புத் தீர்மானங்களுக்கு அமைச்சர்கள் தருகிற பதிலை அச்சிட்டு எல்லா உறுப்பினர்களுக்கும் விவரம் கிடைக்க வழிசெய்யவேண்டும். முக்கியமான பிரச்னைகளில் விவரங்களை—விளக்கங்களை உறுப்பினர்கள் தெரிந்துகொள்ளவேண்டுமென்ற அப்படிப்பட்ட முறையைத் தாங்கள் அறிவிப்பது நல்லது. ஏனென்றால், மீண்டும் அரசாங்கம் அடுத்து சட்டப் பேரவை கூடும்போது விளக்கம் தெரிவிக்க இரண்டு மூன்று மாதகாலமாகலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; நான் இறுதியில் இந்தத் தொடர் கூட்டத்தில் எத்தனை ஒத்தி வைப்பு தீர்மானங்கள், கவன ஈர்ப்பு தீர்மானங்கள் அனுமதிக் கப்பட்டிருக்கின்றன, எவ்வளவு மனுக்கள் வந்தன என்பதையும் விவரமாக சொல்லுகிறபொழுது அதிலே பெரு வாரியானவை நிவர்த்தி செய்யப்பட்டுவிட்டன என்பது தெரியும். ஆனால் விடுபட்டுப்போனவைகளை உறுப்பினர்கள் இந்த அவையிலே சொன்னால் அனுமதிக்க வேண்டுமென்ற கட்டாயமும் இல்லை, நிர்பந்தமும் இல்லை. நானாகக் கருதி. அவையெல்லாம் அவைப் பதிவேட்டிலே ஏறுமானால், சம்பந்தப்பட்ட அமைச்சர்களும் அதிகாரிகளும்; உண்மையாக இருந்தால், நல்லவைகளாக இருந் தால்; நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்றுதான் நான் பேச அனுமதித்தேன்.

கேள்விகள் விடப்படுமானால், அரசாங்கம் கொடுக்கிற பதில் அச்சிட்டுத் தரப்பட வேண்டுமென்று அவர் சொன்னார். அதே போன்று நான் அச்சிட்டுத்தரத் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடு)

அடுத்தது, கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே வேண்டுமானால் கூட அப்படி அனுப்பலாம். ஆனால் ஒத்தி வைப்புத் தீர்மானத் திலே அப்படி அனுப்ப முடியாது. ஏனென்றால், கவன ஈர்ப்புத் தீர்மானம்போல் எடுத்துக்கொண்டு, ஒத்தி வைப்பு தீர்மானங் களுக்குப் பதில் அளிக்க வழியில்லை.

திரு. க. அன்பழகன் ; 'In reference to' என்ற முறையில் இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்கள் மூலமாக அரசுக்கு வந்த கருத்துக்கள்பற்றி இந்த விளக்கங்கள் தெரிவிக்கிறோம் என்று ஒத்திவைப்புத் தீர்மானமாக அல்ல: கருத்துக்களாக விளக்கங்கள் தர தாங்கள் வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; ஒன்று நான் செய்கிறேன்: அவற்றை 41-வது விதிக்குட்பட்டதாக மாற்றி பதில் பெறு கின்ற வகையில் அதற்கான வழி செய்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவரவர்களே, என்னுடைய அணைக்கட்டு தொகுதியிலே நெடுமல்பாளை கிராமம் தீக்கிரை யாகியது. அவர்களைப் பற்றியும், அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதுபற்றியும் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை ஏறக் குறைய 4, 5 மாதங்களுக்கு முன்னால் கொடுத்தேன். இது வரையில் அது நிராகரிக்கப்பட்டதாகவோ, ஏற்றுக் கொள்ளப் பட்டதாகவோ எனக்குத் தகவல் இல்லை......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தங்களுடைய கோரிக்கை அவையேட்டிலே இருக்க வேண்டுமென்ற வகையிலேதான் தங்களைப் பேசச் சொன்னேன். மற்றவைக்கு நான் ஏற்கனவே சொன்னதைப் போல் பதில்.

திரு. எம். ஏ. லத்தீப்: நான் இதுவரையிலே பதில் கிடைக்காததைப் பற்றிமட்டும் சொல்கிறேன். அண்மையிலே சென்னையிலே, தியாகராய நகர் பகுதியிலே ஏற்பட்ட தீ விபத்தைப் பற்றி......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது எடுத்துக்கொள்ளப் பட இருக்கிறது.

திரு. எம். ஏ. லத்தீப்: அடுத்து, 184-வது விதியின் அடிப்படையில் தீர்மானம் கொடுத்தேன். ஆனால் அது எது என்று சொல்ல விரும்பவில்லை. பேரவைத் தலைவருக்கும் எனக்கும் தெரிந்த உண்மை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுபற்றி என்னுடைய அறையிலே வந்து கேட்கவேண்டும்.

திரு. கே. பண்ணை சேதுராம்: பேரவைத் தலைவரவர்களே, 184-வது விதியின்கீழ் 22-ம் தேதி நடந்த சம்பவத்தைப் பற்றி......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைக் கூட அறையிலே வந்து கேட்கவேண்டும்.

அடுத்து அவை உரிமை மீறல் குறித்த பிரச்னை.

திரு. சோ. அழகர்சாமி: பாயின்ட் ஆப் ஆர்டர். இன்றைக்கு இரண்டு ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் வருவதாகச் சொன்னீர்கள். திருப்பூர் நகர் நிகழ்ச்சி பற்றியும், தியாகராய நகர் நிகழ்ச்சிபற்றியும் கொண்டு வருவதாகச் சொன்னீர்கள். அதற்காகத்தான் நாங்கள் உட்கார்ந்து கொண்டிருந்தோம், வரும், வருமென்று......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முறை எப்படியென்றால், முதலிலே உரிமை மீறல் பிரச்னைகள். பிறகுதான் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் வரும்.